# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## TERM TEST - II ( 2017-2018 )

**CLASS : VIII**

**Maximum Marks : 80** **TAMIL** **Time : 3 hours**

மதிப்பெண்கள் : 80 நேரம் : 3 மணி

# தமிழ்

## பகுதி - அ

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

பழமையைப் பக்குவமாய் வழியனுப்பிவிட்டு, வளர்ச்சிக்கு வளமை கூட்டும் புதுவரவுகளுக்கு வரவேற்பு இசைத்திடும் வண்ணத்திருநாள் போகித்திருநாள். தமிழ்த்திருநாளாம் பொங்கல் விழா, தைத்திங்கள் முதல் நாள் நடைபெறும்.இந்நாள் உலகின் வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழும் எழுகதிரைப் போற்றி வணங்கும் திருநாள்.இரண்டாம் நாள் நடைபெறும் மாட்டுப் பொங்கல் உழைப்பின் மேன்மையை உணர்த்தும் திருநாள்.உழவர்கள் தங்கள் உழவுக்கு உறுதுணையான மாடுகளை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றும் திருநாள்.மூன்றாம் நாள், காணும் பொங்கலாகும்.அன்று தம்மைச் சுற்றியுள்ள மக்களை, உறவினர்களை, நண்பர்களைக் கண்டு அன்போடு உரையாடி மகிழ்வர்.

**வினாக்கள்** 5 x 1 = 5

1. **புதுவரவுகளுக்கு வரவேற்பு இசைத்திடும் திருநாள் _______ .**

   அ ) வண்ணத்திருநாள் ஆ) போகி

   இ) கோலி ஈ) பொங்கல்

2. **பொங்கல் திருநாள் __________ என அழைக்கப்படுகிறது.**

   அ ) தமிழ்த்திருநாள் ஆ) தீப ஒளி திருநாள்

   இ) கல்வித் திருநாள் ஈ) போகிப்பண்டிகை

3. **பொங்கல்விழா __________ முதல் நாள் நடைபெறும்.**

   அ ) தைத்திங்கள் ஆ) மார்கழித்திங்கள்

   இ) ஆவணித்திங்கள் ஈ) மாசித்திங்கள்

4. **எழுகதிர் என்பது __________.**

   அ ) மழை மேகம் ஆ) கார்காலம்

   இ) நிலா வெளிச்சம் ஈ) உதய சூரியன்

5. **உழவர்களின் உழவுக்குத் துணையாக இருப்பவை ________.**

   அ ) ஆடுகள் ஆ) யானைகள்

   இ) மாடுகள் ஈ) குரங்குகள்

2) குற்றம் நடந்தால் உடனே காவலருக்குத் தெரிவிப்பதும், குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவி செய்வதும் பொதுமக்களின் கடமையாகும். அமைதியைப் பாதுகாப்பதிலும், குற்ற ஆய்வு செய்வதிலும் காவலருக்கு நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.சமுதாய வளர்ச்சிக்கு அயராத உழைப்பு மட்டும் காரணமன்று. மக்கள் கடைப்பிடிக்கும் சட்ட ஒழுங்கும் காரணமாகும். "ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்" என்று குறள் கூறுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டத்தை மதிப்போம். குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம். சட்டம் நம்மைக் காக்கும்.

<u>வினாக்கள்</u> 5 x 1 = 5

1. **காவலருக்குப் பொதுமக்கள் செய்ய வேண்டிய உதவி யாது ?**
2. **குற்றம் நடந்தால் யாருக்குத் தெரிவிக்க வேண்டும் ?**
3. **சமுதாய வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது எது ?**
4. **எத்தகைய வாழ்க்கை வாழ வேண்டும் ?**
5. **எது நம்மைக் காக்கும் ?**

3) **கடிதம் எழுதுக.** **1 x 6 = 6**

**நூலகம் அமைத்துத் தர விண்ணப்பம்**

4 ) **கட்டுரை எழுதுக.** **1 x 8 = 8**

விலங்கியல் பூங்கா

( அல்லது ) இன்பச்சுற்றுலா

## பகுதி - ஆ

5 ) **சான்று தருக.** **3 x 1 = 3**

1. **ஏழாம் வேற்றுமை**

அ ) எனது கை ஆ) தமிழகத்தின் கிழக்கே கடல்

இ) குகைக்கண் புலி ஈ) கண்ணா வா !

2. **இரண்டாம் வேற்றுமைத்தொகை**

அ ) பாலைப் பருகினான் ஆ) பால் பருகினான்

இ) வேலை எடுத்தான் ஈ) மரத்தை நட்டான்

3. **பெயரெச்சத்தொடர்**

அ ) விழுந்த மரம் ஆ) உண்டனன் மகிழ்ந்தனன்

இ) பெட்டிக்குள் பணம் ஈ) வந்து போனான்

6 ) **நிரப்புக.** **3 x 1 = 3**

1. **இரட்டைச் சொல்லாக வந்து பிரித்தால் பொருள் தராத சொல் __________ .**

அ ) அடுக்குத்தொடர் ஆ) உரிச்சொற்றொடர்

இ) இரட்டைக்கிளவி ஈ) விளித்தொடர்

2. **படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்கப் பயன்படுவது_______.**

அ ) இரண்டாம் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) மூன்றாம் வேற்றுமை

3. **உவமைத்தொகையை அடுத்து அல்லாத மொழி தொக்கி வருவது __________ .**

அ ) உம்மைத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) வேற்றுமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

7 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.** **3 x 1 = 3**

1. **பொன்வளையல் ( சிறப்புப் பெயரை எழுதுக )**

அ ) பொன் ஆ) வளையல்

இ) அணிகலன் ஈ) தங்க வளையல்

2. **தேர்வுக்குப் படி ( நான்காம் வேற்றுமையின் பொருளினை எழுதுக )**

அ ) தகுதி ஆ) பொருட்டு

இ) முறை ஈ) கொடை

3. **நாயோடு குட்டியும் சென்றது (வேற்றுமை உருபினை எழுதுக)**

அ ) உம் ஆ) ஓடு

இ) ஒடு ஈ) து

8 ) **இலக்கணக்குறிப்பு தருக.** **3 x 1 = 3**

1. **மாமுனிவர்**

அ ) இடைச்சொற்றொடர் ஆ) விளித்தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) உரிச்சொற்றொடர்

2. **தூங்குகையான் ஓங்குநடை**

அ ) மூன்றாம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை

இ) நான்காம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

3. **உண்கலம்**

அ ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை

9 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**1.** அ) சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர் எனப்படும்.

ஆ) சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது மரபு எனப்படும்.

இ) சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது போலி எனப்படும்.

ஈ ) சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது மாத்திரை எனப்படும்.

**2.** அ) வினைமுற்று முதலில் வந்து பெயர் தொடர்ந்து வரும் தொடர் வினைமுற்றுத்தொடர் ஆகும்.

ஆ) வினைமுற்று முதலில் வந்து பெயர் தொடர்ந்து வரும் தொடர் பெயரெச்சத்தொடர் ஆகும்

இ) வினைமுற்று முதலில் வந்து பெயர் தொடர்ந்து வரும் தொடர் எழுவாய்த்தொடர் ஆகும்

ஈ ) வினைமுற்று முதலில் வந்து பெயர் தொடர்ந்து வரும் தொடர் அடுக்குத்தொடர் ஆகும்.

**3.** அ) தொகாநிலைத் தொடர்கள் எட்டு வகைப்படும்.

ஆ) தொகாநிலைத் தொடர்கள் மூன்று வகைப்படும்.

இ) தொகாநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும்.

ஈ ) தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது வகைப்படும்.

## பகுதி - இ

10) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

**1. திருக்குறள் ________________ நூல்களுள் ஒன்று.**

அ ) பதினெண்கீழ்க்கணக்கு இ) பத்துப்பாட்டு
ஆ) எட்டுத்தொகை ஈ) பதினெண்மேல்கணக்கு

**2. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் __________.**

அ ) திரிகூடராசப்பக் கவிராயர் இ) ஔவையார்
ஆ) ஒட்டக்கூத்தர் ஈ) பட்டினத்தடிகள்

**3. மீட்டொலி தருவது __________.**

அ ) மிருதங்கம் இ) மத்தளம்
ஆ) புல்லாங்குழல் ஈ) வீணை

4. **ஐராவதீசவரா் கோவிலைக் கட்டியவா் __________.**

அ ) பாண்டிய நெடுஞ்செழியன் இ) இரண்டாம் இராசராச சோழன்

ஆ) திருமலை நாயக்கா் ஈ) நரசிம்ம பல்லவா்

5. **புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றினை ஆங்கிலத்தில் மொழிபெயா்த்தவா்**

அ ) அன்னிப்பெசண்ட் இ) காரல் மாா்க்ஸ்

ஆ) ஜி.யூ.போப். ஈ) கால்டுவெல்

11) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக** **5 x 2 = 10**

1. **பொருள் தருக.**

யாக்கை = ________

தால் = ________

2. **பிரித்து எழுதுக.**

ஆருயிா் = ________

தேனருவி = ________

3. **சோ்த்து எழுதுக.**

கண் + நீா் = ________

செம்மை + கதிரோன் = ________

4. **எதிா்ச்சொல் தருக.**

நாட்டுப்புறம் X ________

அவல் X ________

5. **பேச்சு வழக்கில் உள்ள கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

கால வெச்சா

ஆரடிச்சு

12) **ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் குறுகிய விடை தருக.** **3 x 3 = 9**

1. புறநானூற்றைத் தமிழ்க்கருவூலம் என்பது ஏன் ?
2. தேனருவியின் அலைகளால் எவை சறுக்கும் ? ஏன் ?
3. அரிவாள் எத்தகையது என்று பெண்கள் பாடுகிறாா்கள் ?
4. ஐராவதீசுவரா் கோவில் சிற்பங்கள் உணா்த்தும் மூன்று கதைகள் யாவை ?

**13) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** **1 x 5 = 5**

1. அன்புடையவரின் சிறப்புகள் யாவை ?
2. தாலாட்டுப் பாடலுக்கு ஓர் எடுத்துகாட்டு தருக.

**14) அடி பிறழாமல் எழுதுக** **4 + 2 = 6**

1. **நாடாகு** - எனத் தொடங்கும் புறநானூறு பாடல்
2. **அறம்** - என முடியும் திருக்குறள்

**15) துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **1 x 6 = 6**

எது பெரிய உண்மை

( அல்லது )

**பின்வரும் வரிகளைத் தொடர்ந்து பத்து வரிகளில் சொந்த நடையில் கதை எழுதுக.**

அதிகாலை ஐந்து மணி, படுக்கையை விட்டு எழும்பினாள் வேதவல்லி. பல்துலக்கி விட்டு குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவினாள். தான் செல்லமாக வளர்க்கும் செல்ல நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டவாறே கையில் தண்ணீர் வாளியுடன் முற்றத்தைச் சுத்தம் செய்ய விரைந்தாள் வேதவல்லி. அப்போது ……